Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 24, 2023

திங்கட்கிழமை ஏப்ரல் 24, 2023 | ஒளி: 08 கதிர்: 255 | பக்கம்:05 | நகரப்பதிப்பு ★ | FREE

“எனது பணத் தேவைக்காக ஐவரின் நகைளை அபகரிக்கவே கொன்றேன்”

நெடுந்தீவு சம்பவத்தில் சிக்கியவர் கக்கினார்; நாய்க்கும் வாள்வெட்டு

நெடுந்தீவில் வீடொன்றுக்குள், வயோதிபர்கள் ஐவரை கொடூரமாக கொலை செய்தமை தொடர்பில், 24 மணிநேரத்துக்குள் கைது செய்யப்பட்டவர், ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



பயங்கரவாத எதிர்ப்பு: புதனன்று வருகின்றது

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முதல் வாசிப்புக்காக எதிர்வரும் புதன்கிழமை (26) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வரண்டு போகும் நீர்த்தேக்கங்கள் குடிநீருக்கு தட்டுப்பாடு; மின் கேள்வியும் உயர்வு

நாட்டில் நிலவும் கடும் வரட்சியான வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் என்றும் மின் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

இந்து சமுத்திரத்தின் விமான மற்றும் கப்பற்றுறை

கேந்திர நிலையமாக மாற்றுவது அவசியம்

ஆசிய வலயத்தின் முழுமையான விநியோக மற்றும் போக்குவரத்து மாற்றங்களை கருத்திற்கொண்டு, இந்து சமுத்திரத்தின் விமான மற்றும் கப்பற்றுறை கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இந்திய உதவியால் எழுந்து நடக்கிறோம்

நுவரெலியாவில் பிரதமர் தெரிவிப்பு

டி.ஷங்கீதன்

இலங்கை பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்திருந்த பொழுது, எமக்கு உதவி செய்தது இந்தியா என்பதை நாம் மறந்துவிட முடியாது என்றும் எங்களுடைய நாடு எதிர்நோக்கிய பொருளாதார பின்னடைவின் பொழுது, இந்தியாவின் உதவியானது நாம் மீண்டும் எழுந்து முன்னோக்கி நடப்பதற்கான அடித்தளத்தை வகுத்துள்ளது என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பிரதமர் மாறமாட்டார்; மொட்டும் பிளவுபடாது

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

பிரதமர் பதவியை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை எனவும், பிரதமர் பதவியை மாற்றத் தயார் என கூறப்படுவது பொய்யானது எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

நாட்டின் அபிவிருத்திக்கு

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மிக முக்கியம்

நாட்டின் அபிவிருத்திக்கும் நாட்டை உலகத்தில் முன், முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் பயங்கரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் எம்.பியுமான வஜிர அபேவர்தன, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமல்படுத்துவது மிகவும் முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

நிதர்ஷன் வினோத்

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் பகுதியில் அமைந்துள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (23) காலை கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



ஆளும்கட்சி எம்.பிகளின் கூட்டம் இன்று

எதிர்க்கட்சியும் கூடுகிறது

ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (24) நடைபெ

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில் நாளை ஹர்த்தால்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்கக்கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாளை செவ்வாய்க்கிழமை (25) இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு பல அரசியல் கட்சிகள் மற்றும் வர்த்தக சங்கங்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

இடைநிறுத்தப்பட்டிருந்த

கண் சத்திரசிகிச்சைகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பில் உள்ள தேசிய கண் வைத்தியசாலை, இன்று (24) முதல் பூரண செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது என்றும் இடைநிறுத்தப்பட்டிருந்த சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இன்று ஆஜராகுமாறு

டப்புலவுக்கு ரீஜடி மீண்டும் அழைப்பு

வரத் தவறினால் சட்ட நடவடிக்கை

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து டப்புல தெரிவித்த சில கருத்துகள் தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குவதற்காக திங்கட்கிழமை (24) பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு (ரீஜடி) முன்னிலையாகுமாறு, முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தீர்வு வழங்கினால் திருத்தி முடிப்போம்

தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டால் இரண்டு வாரங்களுக்குள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவு செய்ய முடியும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க கூட்டமைப்பு தெரிவித்தது.

தொடர்ச்சி P2

‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ விவகாரம்:

சிங்கப்பூரில் வழக்கு தாக்கல் செய்ய முடிவு

‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்துக்குள்ளானதில் இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரி, சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இன்று (24) வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

“எனது பணத் தேவைக்காக ஐவரின் நகைகளை அபகரிக்கவே கொன்றேன்”

இதன்படி, “குறித்த வயோதிபர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள் என நினைத்து, சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்'' என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த வீட்டில் இருந்த வளர்ப்பு நாயொன்றும் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளது. அந்த நாய் மிரண்டுபோய் இருக்கின்றது. ஆகையால், கொலைச் செய்யும்போது அந்த நாய் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்றும் அறியமுடிகின்றது.

தொடர்ந்து அவர் தனது வாக்குமூலத்தில். ''நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன். வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர்.

அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன். அதனால் சனிக்கிழமை (22) அதிகாலை 4.30 பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன்”என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சந்தேகநபரிடமிருந்து 26 பவுண் தங்க நகைகள், ஆடைகள் மற்றும் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு, மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமிற்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டன.

மேலும் 100 வயது மூதாட்டி ஒருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப்பட்டார்.

கேந்திர நிலையமாக மாற்றுவது அவசியம்

அதற்குரிய திட்டமிடல் அரசாங்கத்தின் 25 வருட அபிவிருத்தி திட்டத்துக்கு உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு வடக்கு துறைமுகத்தின் 30 வருட அபிவிருத்தி திட்டத்தினை வெளியிடுவதற்கான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, “துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சினை இரு வேறு அமைச்சுக்களாக பிரிக்கலாம் அல்லவா என பலரும் கேட்கின்றனர். இருப்பினும் இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என்பதாலேயே இரு அமைச்சுக்களையும் ஒன்றாக்கியுள்ளோம்.

25 வருடங்களுக்கு எமது திட்டம் என்ன? அவற்றை எவ்வாறு செயற்படுத்தலாம் என்ற மாற்றுச் சிந்தனைகள் அவசியமானதாகும் என்பதோடு இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, இந்தியா, பங்களாதேஷ், ஈரான் உள்ளிட்ட மக்ரான் கடல் வலயத்தின் மேம்பாடுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது என்றார்.

சிங்கப்பூரில் வழக்கு தாக்கல் செய்ய முடிவு

வழக்கை இலங்கையில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை உள்ளபோதும், வழக்கின் பிரதிவாதிகள், கப்பலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், நடத்துநர் மற்றும் முகாமையாளர்கள் உட்பட வணிக இருப்பு சிங்கப்பூராக காணப்படுகிறது.

இதுகுறித்த உரிமைகோரல் நடவடிக்கையை நிறுவுவதற்கு சிங்கப்பூர் பொருத்தமான இடமாக இருக்கும் என்பதால் அமைச்சரவை அனுமதியுடன் சிங்கப்பூரில் உள்ள சட்ட நிறுவனமொன்றிடம் இந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் சஞ்ஜய இராஜரட்ணம் தெரிவித்தார்.

குறித்த இழப்பீட்டு தொகை குறித்து எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்திற்கு அறிவிக்கவுள்ளதாகவும் இது குறித்து கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் சட்ட மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

டப்புலவுக்கு ரீஜடி மீண்டும் அழைப்பு

ஏப்ரல் 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் லிவேராவை ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் ஆஜராகத் தவறியதையடுத்து, மீண்டும் மூன்றாவது தடவையாக அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதியன்று, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் ஒருவரை சாட்சியாக அழைப்பது சட்டத்தை மீறும் செயலாகும் என்று 12 விடயங்களை மேற்கோள் காட்டி தனது கனிஷ்ட சட்டத்தரணி ஊடாக ஏழு பக்க ஆட்சேபனை கடிதத்தை லிவேரா சமர்ப்பித்தார்.

மேலும், 21ஆம் திகதியன்றும் அவர் ஆஜராகாத நிலையில், அவரது ஆட்சேபனைக் கடிதத்துக்கு பதிலளித்துள்ள ரிஜடி, திங்கட்கிழமை ரிஜடிக்கு வருகை தரத் தவறினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்திய உதவியால் எழுந்து நடக்கிறோம்

நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் புனித நீர் தடாக திறப்பும் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டலும் முத்திரை வெளியீடும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்றது.

ஆலய அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சிறப்பு அதிதியாக இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றி பிரதமர் மேலும் தெரிவிக்கையில், “இன்று சீதையம்மன் ஆலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தியான மண்டபத்துக்கும் இந்திய மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அதற்கு காரணம் அதற்கான நிதியை வழங்குகின்றவர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள்.

இது ஒரு புறம் எங்களுடைய நாட்டிற்கும் இந்தியாவுக்கும் இருக்கின்ற கலை கலாசார ரீதியான ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. எங்களுடைய இரு நாட்டிற்கான உறவு பல தசாப்தங்களை கடந்து செல்கின்றது.

இந்தியாவின் இமயமலையின் பல பகுதிகளிலும் தியான மண்டபங்களும் அதற்கான சூழலும் அமைந்திருக்கின்றது. அதே போல இன்று இலங்கையின் உயரமான மலையான பீதுருதாலகால மலையின் அடிவாரத்தில் சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டப்படுகின்றது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் மிகவும் அழகாக இராமயணத்துக்கும் இலங்கைக்குமான தொடர்பை விரிவாக எடுத்துக் கூறினார். இந்த இதிகாசமானது பல தசாப்தங்களை கடந்து செல்கின்றது.

இலங்கை நாடானது இன்று முன்னோக்கி செல்கிறது என்றால் அதற்கு இந்தியா எங்களுக்கு செய்த உதவிகள் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. எங்களுடைய நாடு எதிர்நோக்கிய பொருளாதார பின்னடைவின் பொழுது இந்தியாவின் உதவியானது நாம் மீண்டும் எழுந்து முன்னோக்கி நடப்பதற்கான அடித்தளத்தை வகுத்துள்ளது.

மதங்களுக்கு இடையிலான நெருங்கிய புரிந்துணர்வும் எமது பொருளாதார பின்னடைவின் பொழுது எமக்கு பல உதவிகளை பெற்றுக் கொள்ள வழிவகுத்தது. புத்தரின் போதனைகள் எம்மை நல்வழிப்படுத்துவதற்கு ஒரு தலமாக அமைந்திருக்கின்றது. அதனை நாம் அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும். இன்று நாம் அனைத்து மதங்களுக்கும் அவர்களுக்கான முக்கியத்துவத்தையும் வழங்கி வருகின்றோம்” என்றார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மிக முக்கியம்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக சில அரசியல் குழுக்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் மாத்திரமன்றி உலகின் ஏனைய நாடுகளிலும் , பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறான சட்டங்கள் அமலாக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் உரிய முறையில் அமல்படுத்தப்பட்டால் உலகுக்கு கடன் வழங்கும் நாடாக இலங்கையை மாற்ற முடியும் என்றும் கூறினார்.

ஒரு நாடு கடனை வாங்கும் போது, வாங்கிய கடனை கையாளும் முறைகள், கடனை செலுத்தும் முறை ஆகியவற்றை சரியாகக் கையாள வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், அப்போதுதான் அந்த நாடு உலகில் சக்திவாய்ந்த நாடாக மாற முடியும் என்றார்.

ஆளும்கட்சி எம்.பிகளின் கூட்டம் இன்று

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான பாராளுமன்ற விவாதம் மற்றும் வாக்கெடுப்பு குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக அறியமுடிகிறது.

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் ஏற்படும் தாமதம் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் திங்கட்கிழமை (24) மாலை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

வைத்தியர் வீட்டு வளவை சுத்தம் செய்து கொண்டிருந்த பொழுது கைக்குண்டை கண்டெடுத்துள்ளார்.

இதையடுத்து வைத்தியர் கைக்குண்டை எடுத்துக்கொண்டு சாவகச்சேரி, தம்பதோட்ட இராணுவ முகாமுக்கு சென்று அந்த கைக்குண்டை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக இராணுவத்தினரால் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வடக்கு, கிழக்கில் நாளை ஹர்த்தால்

பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் ஏப்ரல் 25ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான கதவடைப்பு போராட்டத்தை நடத்துவதற்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

அதற்கிணங்க, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வர்த்தக சங்கங்கள் மற்றும் அரசியற் கட்சிகள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நாளை (25) சமர்ப்பிக்கவுள்ள நிலையில், அன்றைய தினத்தில் வடக்கு, கிழக்கு தழுவிய கதவடைப்பை மேற்கொள்ள தமிழ் கட்சிகள் தீர்மானித்தன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர். எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியினர், தமிழ் தேசிய கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் நடத்திய சந்திப்பின் பின்னர், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கண் சத்திரசிகிச்சைகள் இன்று முதல் ஆரம்பம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து சில நோயாளிகளில் சிக்கல்கள் காணப்பட்டதை அடுத்து, கடந்த வாரத்தில் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டன.

தேசிய கண் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட ஆறு நோயாளர்களுக்கு தொற்றுகள் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்டது.

தீர்வு வழங்கினால் திருத்தி முடிப்போம்

எவ்வாறாயினும் தமது பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வுகளை வழங்க அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று சங்கம் குறிப்பிட்டது.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க, செயற்குழு கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இது தொடர்பாக நாளை செவ்வாய்க்கிழமை (25) நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு; புதுனன்று வருகின்றது

மேலும், ஊழல் ஒழிப்பு சட்டமூலம் எதிர்வரும் மே மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் கூறியுள்ளார்.

குறித்த சட்டமூலம் கடந்த 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நீதிமன்ற விடுமுறை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்வேறு சிவில் அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் வகையில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பது தாமதிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்ற புதிய சட்டமூலம் மார்ச் 23 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலையில், இது தற்போதைய 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திறம்பட நீக்கித் திருத்திய சட்டமூலமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காலத்திலிருந்தே சிவில் சமூகம் மற்றும் சட்ட நிபுணர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

குறித்த சட்டமூலம், நாட்டின் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக, எதிர்க்கட்சிகள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்வேறு சிவில் மற்றும் வெகுஜன அமைப்புகள் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடிநீருக்கு தட்டுப்பாடு; மின் கேள்வியும் உயர்வு

மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 30.8 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் குறைந்த நீர்மட்டம் காரணமாக நாட்டின் மின் உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு இப்போது 13 சதவீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கம் மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் முறையே 13.3 மற்றும் 15 சதவீதமாக பதிவாகியுள்ளன.

விக்டோரியா, ரந்தெனிகல, சமன் வெவ நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு முறையே 34, 84 மற்றும் 38 சதவீதங்களாக காணப்படுகின்றன.

மொத்த மின் உற்பத்தியில் 14 சதவீதம் மட்டுமே நீர்மின் நிலையங்கள் மூலமாகவும், 72.5 சதவீதம் அனல் மின் நிலையங்களில் இருந்தும் கிடைக்கும் நிலையில், நாளாந்த மின்சாரத் தேவை அதிகரித்து, மணித்தியாலத்திற்கு 45.2 ஜிகாவோட்களை எட்டியுள்ளது.

கடந்த வாரம் முதல் நாட்டின் மின் கேள்வி அதிகரித்துள்ளதுடன், அமைச்சர் காஞ்சன விஜேசேகரவும் புதன்கிழமை (19) அன்று 49.53 ஜிகாவோட் அதிக பட்ச மின்சக்தி தேவையாக பதிவாகியதாக குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் மாறுமாட்டார் மொட்டும் பிளவுபடாது

இது எதிர்க்கட்சியினரால் புனையப்பட்ட கதை என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், மொட்டுக் கட்சியில் பிளவு இல்லை எனவும், இது தொடர்பில் பரப்பப்படும் பிரசாரம் பொய்யானது என்றும் நாட்டுக்கு தேவையான தீர்மானத்தை மொட்டு எடுக்கும் எனவும் வலியுறுத்தினார்.

மறைந்த ரெஜி ரணதுங்கவின் 86ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது உடுகம்பல நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தியதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியில் பிரிவு ஏற்பட்டுள்ளதா? என்று ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினார்.

“மொட்டில் பிரிவு இல்லை. அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்க தயாராக இருப்பதாக கூறப்பட்டது. ஆனால் நமக்கு ஒரு பிரதமர் இருக்கிறார் என்றார். அவ்வாறு செய்யும் எண்ணம் அவருக்கு இல்லை. அதற்கு அடுத்ததாக சஜித் நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது. இது மற்றவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்தக் கதைகள் அனைத்தும் எதிர்க்கட்சிகளால் புனையப்பட்டவை” என்றார்.

பாராளுமன்றத்தில் பலமான அரசாங்கத்தை அமைப்பதற்கு தற்போது பெரும்பான்மையானவர்கள் கூடியுள்ளனர். அது அவர்களுக்கு ஒரு பிரச்சினை. எனவே எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் பெரும்பான்மையை உடைத்து அரசாங்கத்திற்கு சவால் விட விரும்புகின்றன. ஆனால் நமது எம்.பிக்கள் இதில் ஏமாறவில்லை” என்றும் பதிலளித்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் அதன் பாதிப்புகள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

“ குறித்த சட்டமூலம் இன்னும் விவாதிக்கப்படுகிறது. சில விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போது நாட்டு மக்கள் அதைக் கேட்கலாம். திருத்தங்கள் தேவையென்றால் முன்மொழிவுகளை சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கலாம்” என்றார்.

இப்போதே ஆசிரியர்களை ஒடுக்க அரசு தயாராகிறது, இல்லையா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

“இந்த நாட்டில் பிள்ளைகளின் கல்வியை அழிப்பது, நாசப்படுத்துவது தவறல்லவா? அப்படி செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. பிள்ளைகளின் பெறுபேறுகள் தாமதமானால் அவர்களால் பல்கலைக்கழகம் செல்ல முடியாது. இது அவர்களின் எதிர்காலத்திற்கு எதிரான குற்றம். நாட்டில் ஜனநாயகம் என்பது போராட்டக்காரர்கள் விரும்பியதைச் செய்ய ஆர்வலர்களை அனுமதிப்பது அல்ல. நாட்டின் பொது மக்களுக்கு தேவையான சட்டங்கள் அதில் இருக்க வேண்டும். அதைத்தான் செய்கிறோம்” என்று பதிலளித்தார்.

பொதுஜன பெரமுன தலைவர் குறித்த கேள்விக்கு பதிளித்த அமைச்சர், “கட்சியின் யாப்பின் பிரகாரம் வருடாந்தம் பொதுச்சபை கூட்டப்பட்டு கட்சியின் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அதன்படி இன்று கட்சி அடுத்த நிர்வாகிகள் குழுவை நியமிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இன்று கட்சியின் பொதுக்குழுவில் முடிவு செய்யப்படும். கட்சியின் தலைவராகப் பணியாற்றும் ஜி.எல். பீரிஸ் கடந்த காலங்களில் கட்சியின் விவகாரங்களில் இருந்து விலகி இருந்தார். எனவே அந்த பதவிக்கு பொருத்தமான ஒருவரை கட்சி நியமிக்கும்“ என்றார்.

சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று ஓ.எம்.பி மிரட்டல்

சண்முகம் தவசீலன்

மூன்று தடவை அறிவித்தும் ஓ.எம்.பி அலுவலகத்திற்கு மதிப்பு கொடுக்கவில்லை நான்காவது தடவை அறிவித்தும் வரவில்லை என்றால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி ஓ.எம்.பியினால் மிரட்டல் விடுக்கப்படுவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு குற்றம் சாட்டினர். முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் றஞ்சனா, உபசெயலாளர் சுப்பிரமணியம் பரமானந்தம் ஆகியோர் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

ஓ.எம்.பி அலுவலகம் உருவாக்கப்பட்டதில் இருந்து இன்று வரைக்கும் எட்டு மாவட்ட சங்க தலைமையினாலும் உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஓ.எம்.பி அலுவலகம் கடிதங்கள் அனுப்பி வருகின்றார்கள்.

பிள்ளைகளையும் வங்கி கணக்கு இலக்கமும் கொண்டுவரவேண்டும் என்று அறிவித்துள்ளார்கள்.

ஓ.எம்.பி அலுவலத்தின் நட்ட ஈடுட்டினை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகின்றார்கள். தமிழ் மக்களை மிரட்டி, அவர்கள் வேலை செய்ய தேவையில்லை. நான்காவது தடவை அறிவித்து வரவில்லை என்றால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி வருகின்றார்கள். நாங்கள் எங்கள் உயிர் இருக்கும் மட்டும் போராடுவோம். எங்கள் போராட்டத்தினை அடக்க, புதிய சட்டத்தினையும் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

உங்கள் கைகளில் கையளித்த எங்கள் உறவுகளை கேட்கின்றோம். இந்த அரசாங்கம் எங்களை வைத்து பிழைக்காமல் வேறு வழியிருந்தால் பாருங்கள். காணாமல் போன உறவுகளுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் நீதி வழங்க வேண்டும் என்று இன்று வரை போராடிவருகின்றோம். இந்த நீதியினை தவிர எவர் வந்தாலும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில்

மாணவர்களின் வரவு மிகக் குறைவதுடன் இடைவிலகல்களும் அதிகம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி வடக்கு கல்வி வலத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாக காணப்படுவதுடன் இடைவிலகல்களும் அதிகரித்து காணப்படுவதாக வலய கல்வித் திணைக்கள தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுங்கற்ற வரவுகள் மற்றும் இடைவிலகல் என்பன அதிக அளவில் காணப்படுகின்றன. குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் அமைந்திருக்கின்ற பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிக குறைவாக காணப்படுகின்றது.

வடக்கு கல்வியில் உட்பட்ட முதல் நிலை பாடசாலைகளான முருகானந்தா கல்லூரி, தருமபுரம் மத்திய கல்லூரி, பிரமந்தனாறு ஆகிய பாடசாலைகளிலும் ஏனைய ஆரம்ப இடைநிலை பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவு மிக குறைவாக காணப்படுவதுடன் இடைவிலகல்களும் அதிகளவிலே காணப்படுகின்றன.

> **கிளிநொச்சி வடக்கு கல்வி வலத்திற்கு உட்பட்ட பின்தங்கிய பகுதிகளில் அமைந்திருக்கின்ற பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிக குறைவாக காணப்படுகின்றது**

இதேவேளை இவ்வாறு இடை விலகிய மாணவர்களை மீளக் கற்றலில் இணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவர்களது தேவைகள், அவர்களது குடும்பத்தின் பொருளாதார நிலைமைகளை நிறைவு செய்ய வேண்டும்.

அவ்வாறு நிறைவு செய்கின்ற போதுதான் குறித்த இடைவிலகல் மற்றும் ஒழுங்கான வரவுகளை குறைக்க கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாந்தபுரம் பாடசாலையில் 55 க்கு மேற்பட்ட மாணவர்கள் ஒழுங்கற்ற வரவுகளை கொண்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்ஃபி மோகத்தால் படுகாயமடைந்த சிறுவன்

எம். செல்வராஜா

செல்ஃபி மோகத்தால் 15 வயது சிறுவனொருவன் ரயிலில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற விசேட ரயிலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று ரயில் செல்லும் போது செல்ஃபி எடுக்க முயற்சித்த குறித்த சிறுவன், ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய பகுதிகளுக்கு இடையில் ரயிலில் இருந்து தவறி விழுந்ததாகப் ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் படுகாயமடைந்த சிறுவன் தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைவஸ்தை ஒழிக்க வேண்டியவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள்தான்

அக்கரைப்பற்று ஜம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ் எம் சபீஸ்

நூருல் ஹுதா உமர்

பள்ளிவாசல் வெறும் தொழும் இடமாக மாத்திரம் அல்லாமல், அனர்த்தங்களின் போதும் மக்கள் அல்லலுறும் சந்தர்ப்பங்களிலும் அவர்களின் நலன்களில் கவனம் செலுத்தும் இடமாக செயற்பட்டது; மாணவர்களுக்கு வழிகாட்டும் அமைப்பாக செயற்பட்டது; சமூக விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இடமாக செயற்பட்டது என அக்கரைப்பற்று ஜம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ். எம்.சபீஸின் சம்பிரதாய உரையின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், போதைவஸ்து பாவனையை முழுமையாக பள்ளிவாசல்களினால் அழிக்க முடியாது. போதைவஸ்து பாவனை கொண்டவர் என அறியும் பட்சத்தில் அவர்களது திருமணங்களை

முன்னின்று நடத்தாமல் தவிர்த்தோம். போதைவஸ்தில் மரணித்தவரின் ஜனாஸாவுக்கு எங்களது பள்ளிவாசல் உலமாக்களை அனுப்பாமல் தடை செய்தோம். ஆனால் போதைவஸ்தை முழுமையாக ஒழிக்க வேண்டியவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள்தான். அது பள்ளிவாசல்களினால் முடியாது என்றார்.

முறைப்பாடு செய்த பெண் மரணம்

எஸ்.கணேசன்

குடும்பத் தகராறு தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்த பெண்ணொருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் (22) போகாவத்தையில் இடம்பெற்றுள்ளது.

திம்புள்ள - பத்தன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகாவத்தை பகுதியில் வசிக்கும் லெட்சுமனன் நிஷாந்தினி (வயது - 34) என்ற நான்கு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று இவர் தமது குடும்பத் தகராறு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக இரு பிள்ளைகள் சகிதம் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார் எனவும் முறைப்பாடு செய்ததையடுத்து ஒரு பிள்ளை சகிதம் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்றுள்ளார் எனவும் அதன்பின்னர் குடிப்பதற்கு நீர் எடுத்துவருமாறு அப்பிள்ளையிடம் கூறி, அவரை அனுப்பிவிட்டு நீர்வீழ்ச்சியில் குதித்து உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொட்டகலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் இது குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆளுனரின் நடவடிக்கை மிகவும் மோசமாகவுள்ளது

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்.

வ. சக்தி

கிழக்கு மாகாண ஆளுனர் எடுக்கும் நடவடிக்கைகள் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு அரசியல் செய்வதற்கு இலகுவாக அமையும். எம்மைப் பொறுத்தவரையில் ஆளுனரின் நடவடிக்கை மிகவும் மோசமாகவுள்ளது. கள நிலவரங்களைப் பார்க்காமல் முடிவுகளை எடுக்கக்கூடாது. சில அரச உத்தியோகஸ்தர்கள் தாங்கள் பெறும் வேதனைத்தில் பெற்ற கடன்களைக் கழித்துவிட்டு மாதாந்தம் 258 ரூபாவும் பெறுகின்றார்கள் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், இராஜாங்க அமைச்சரின் தலைமையில் கடந்த 20.04.2023 நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமக்கு உரிமை ஒரு கண் என்றால் அபிவிருத்தி மறுகண். இரண்டும் எமக்கும் தேவை என்பதால்தான் இரண்டையும் சமாந்தரமாகக் கொண்டு செல்கின்றோம். நிதிக்குழுக்களின் கருத்துகளுக்கு அமைய ஆளுனர் இப்பகுதி மக்களின் நிலமையை அறியாமல் சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துகின்றபோது அதன் பாதிப்புகளை எமது மக்கள் எதிர்நோக்குகின்றார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள்கூட அரச உத்தியோகஸ்த்தர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே மண்டூர் - குருமண்வெளி, அம்பிளாந்துறை - குருக்கள்மடம், ஆகிய படகுப் பாதைப் போக்குவரத்திற்காக தற்போது மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவரிடம் 50

ரூபாய் அறவீடு செய்யப்படுகின்றது. இது தற்காலத்தில் பொருத்தமில்லாத விடயமாகும். எனவே பாடசாலை மணவர்கள், பிரத்தியேக கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் இதில் இலவசமாக பயணம் செய்வதற்கும், மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் 10 ரூபாய் மாத்திரம் அறவீடு செய்ய வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளதாக மாகாண கல்வித்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. தேசிய ரீதியில் பார்க்கின்றபோது கிழக்கில் ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளதாக காட்டப்படுகின்றது. ஆனால் கிழக்கில் இன்னும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குரிய ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்றன. 300 இற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் கல்குடா வலயத்தில் உள்ளன. இதன் காரணமாக கல்வியற் கல்லூரியிலிருந்து அண்மையில் நியமனம் பெறவுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர்களை அனைவரையும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கே நியமிக்குமாறு கல்வியமைச்சரிடம் கேட்டுள்ளேன் என அவர் இதன்போது தெரிவித்தார்.

சிவனைத் தரிசிக்கச் சென்றவர் மரணம்

கெ.தீ. வருமாள்

சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச் சென்ற முதியவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவினால் உயிரிழந்த சம்பவம் மஸ்கெலியாவில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

தங்கல்ல பகுதியைச் சேர்ந்த 70 வயதான டபலியூ.ஏ.குணதிலக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சம்பவ தினத்தன்று இரவு தனது குடும்பத்தினருடன் சிவனொளிபாத மலைக்கு சென்று கொண்டிருந்த போது சியத்த கங்குல பகுதியில் வைத்து அவருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் உடனடியாக அவசர அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிராதேசிய வைத்திய சாலைக்கு அழைத்து வரும் நிலையில் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர கூறுகையில் "கடந்த டிசம்பர் மாதம் முதல் நேற்று வரை 12 பேர் இவ்வாறு மரணித்து உள்ளனர் எனவும் குறித்த நபரின் உடல் மஸ்கெலியா பிராதேசிய வைத்திய சாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளது எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வரணியில் மினி சூறாவளி

எஸ். தில்லைநாதன்

மினி சூறாவளி காரணமாக பனைமரங்கள் முறிந்து வீழ்ந்து பருத்தித்துறை- கொடிகாமம் பிரதான வீதியின் போக்குவரத்துகள் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டிருந்ததுடன், பி.ப 6.00 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இதனால் வரணிப் பிரதேசத்தில் சிலபகுதிகளில் கடுமையான பாதிப்புகள் பதிவாகியுள்ளன. நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி, வரணி வைத்தியசாலை போன்ற இடங்களில் மரங்கள் முறிந்து மின் வடங்கள் மீதும் வீதிக்கு குறுக்காகவும் வீழ்ந்தமையால் குறித்த பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டதுடன் போக்குவரத்துகளும் தடைப்பட்டது.

அத்துடன் நாவற்காடு பகுதியில் வயல்கரை அண்ணமார் ஆலயம் ஒன்றின் மண்டபம் மற்றும் மடப்பள்ளி முற்றாக சேதமடைந்துள்ளன.

வடக்கு, கிழக்கு தழுவிய நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு அழைப்பு

எஸ்.ஹொசேரியன் லெம்பேட்

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் நாளை செவ்வாய்க்கிழமை பொது நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

இந்த நிலையில் குறித்த நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகியவை இணைந்து ஞாயிற்றுக்கிழமை (23) டெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்தனர்.

டெலோ கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளருமான டானியல் வசந், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஆர் குமரேஸ், புளொட் கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் அ. ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறிப்பாக வடக்கு கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவ மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராகவும் இந்த நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கமானது எமது மக்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஏற்கனவே அடக்குமுறைக்கு உள்ளாக்கி இருக்கின்ற எமது மக்களை மீண்டும் மீண்டும் அடக்குவதற்கான ஒரு புதிய சட்டத்தை உருவாக்குகின்றது. இந்தச் சட்டத்தினூடாக அரசாங்கத்துக்கு எதிராக சமூக ஊடகங்களில் சிறிய கருத்தை பதிவிட்டாலே அவர்களை கைது செய்து சிறைபடுத்துவதற்கான அதிகாரம் ஆயுதப் படைகளுக்கு வழங்கப்படுகின்றது. எனவே அன்றைய தருணம் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு அரசாங்கத்திற்கு பாரிய எதிர்ப்பை காட்டுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எதிர்கால சந்ததியினரிடம் தீய எண்ணங்களை விதைக்க வேண்டாம்

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் பல்வேறான விளையாட்டுப் போட்டிகளும் கலாசார நிகழ்வுகளும் நடத்தப்படும். கொரோனாவுக்குப் பின்னர் நாட்டின் பல பாகங்களிலும் இன்னுமே அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஜனாபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு காலி முகத்திடலில் சனிக்கிழமை (22) நடைபெற்றது. அதில், உள்ளூர் போட்டியாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டு போட்டியாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

அந்த நிகழ்வில் மட்டுமன்றி, நாடளாவிய ரீதியில் சுற்றுலா ஹோட்டல்களில் ஆங்காங்கே நடத்தப்பட்ட போட்டிகளிலும், புத்தாண்டு பிறப்புகளிலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பங்கேற்றிருந்தமை விசேட அம்சங்களில் ஒன்றாகும்.

சுற்றுலாத்துறை மேம்படுத்தல் மற்றும் இன்னும் பலரை இலங்கைக்கு கவர்ந்து இழுத்தல் உள்ளிட்ட செய்திகள், இவ்வாறான விளையாட்டுகளின் ஊடாக, ஏனைய நாடுகளுக்கும் கொண்டு சேர்க்க முடியும்.

சிறியவர்கள் முதல் முதியோர் வரையிலும் எவ்விதமான பேதங்களும் இன்றி விளையாட்டுப் போட்டிகளிலும் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்று, தங்களுடைய திறமையை காண்பித்து, வழங்கப்பட்ட பரிசில்களை மனமுவந்து வாங்கிச்சென்றதை அவதானிக்கக்கூடியதாய் இருந்தது.

அதன்பின்னர், நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று ஆடி,பாடி கொண்டாடி மகிழ்ந்து, புத்தாண்டை வரவேற்றிருப்பர். புத்தாண்டு விளையாட்டு நிகழ்விலும், புத்தாண்டு விடுமுறைக்காகச் சென்றிருந்தபோது ஏற்பட்ட கவனக்குறைவாலும் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

ஊர்களுக்கு இடையேயான ஓட்டப்போட்டியில் தன்னுடைய 15 வயதான அண்ணாவை வெற்றி பெறச் செய்யவேண்டுமென அவருடன் ஓடிய 10 வயதான தம்பி, மயங்கிவிழுந்து உயிரிழந்த சம்பவமொன்று கெக்கிராவையில் இடம்பெற்றுள்ளது.

ஆக, போட்டி ஏற்பாட்டாளர்கள், இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படாதவகையில் கவனித்துக் கொள்ளவேண்டும். ஊர்களுக்கு இடையிலான ஓட்டப்போட்டியில் பங்கேற்பவர்கள் வைத்திய பரிசோதனைக்கு முன்கூட்டியே உட்படுத்தப்படுவார்கள். எனினும், இடைநடுவில் புகுந்துகொண்ட இச்சிறுவனை தடுத்து நிறுத்தியிருந்தால், முயற்சியை தடுத்துவிட்டனர் என்றும் இகழக்கூடும்.

எனினும், ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டுவிட்டால், ஏற்பாட்டாளர்கள் மீதே குற்றஞ்சாட்டுவர். ஆகையால், ஒவ்வொரு விடயத்திலும் கவனத்தை செலுத்தவேண்டியது ஏற்பாட்டாளர்களின் கடப்பாடாகும் என்பதுடன், தங்களுடைய பிள்ளைகளையும் பங்கேற்க வைக்கவேண்டுமாயின் போட்டி தொடர்பிலான விதிமுறைகளை பெற்றோர் கடைப்பிடிக்கவேண்டும்.

இந்நிலையில், இன்னும் சில போட்டிகளில் பாலியல் உணர்வை தூண்டும் வகையிலான போட்டிகள் நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. அவை தொடர்பில் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தன.

பெண்களின் இடுப்பில் நீளம் குறைந்த நூல் கட்டி தொங்கவிடப்பட்டிருந்த பணிஸை, ஆண் போட்டியாளர்கள் முழங்தாளிட்டு உண்பதும், பெண்களில் கை இடுக்குகளுக்கு இடையில் பால் நிரப்பப்பட்ட போத்தலை இறுக்கி பிடித்திருக்க, அதனை முழந்தாளிட்டு ஆண்கள் உரிஞ்சிக் குடிப்பதைப் போல போட்டிகள் நடத்தப்பட்டன.

இவற்றுக்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளார். ஏற்பாட்டாளர்கள் தூர நோக்கத்துடன் செயற்படவேண்டும். எதிர்கால சந்ததியினரிடம் தீய எண்ணங்களை விதைத்துவிடவேண்டாமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசாரநிகழ்வுகளைபுகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

அலுவலகத்தில் புதிதா கடமைக்கு வந்த அலுவலர்கள், தங்கள் வேலை மிகவும் கஷ்டமானது என எண்ணிக் கொள்வார்கள். ஆனால், காலங்கள் செல்லச் செல்ல, கடமைகளில் திறமையானவர்களாக மாறிவிடுகின்றார்கள்.

ஆனால், சிலர் தங்கள் கருமங்களில் ஆர்வம் இன்மையால், தொழிலில் முன்னேற்றம் அடையாமல், இருந்துவிடுகின்றார்கள்.

இவர்களுக்குப் பின்னர், வேலைக்குச் சேர்ந்த புதியவர்கள், ஆர்வத்துடன் கடமைகளைச் செய்தமையால், தமக்கு முன்னர் நியமனம் பெற்றவர்களைவிட, உயர்பதவிகளை பெற்றுவிடுகின்றனர்.

எல்லோரும் திறமைசாலிகளாக உயர முடியும். தொடர்ச்சியான முயலுகைகள் அவசியமானவை. செய்யும் தொழிலை நேசித்தால், எந்தச் சுமையான கடமைகளும் சுவாரஸ்யமாக மாறிவிடும்.

சொந்தப் பிரச்சினைகளை அலுவலகத்துக்குச் சுமத்தலாகாது. தொழில் எமது உயிருக்கு மேலானது. சமூகத்துக்கும் குடும்பநலனுக்கும் ஆற்றும் நற்செயல்களே, முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும். முழுமையான இரசனையுடனும் ஈடுபாட்டுடனும் காரியங்களை ஆற்றுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தல்

என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

தனது தாயார் சிறிமாவோவின் கொள்கைகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்திருந்தால் நாடு வங்குரோத்து அடைந்திருக்காது என்று அண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குறிப்பிட்டிருந்தமை நகைப்பை வரவழைப்பதாக இருந்தது.

இந்த நாடு சுதந்திரமடைந்த 75 ஆண்டுகளில், 26 ஆண்டுகள் இந்நாட்டின் ஆட்சித் தலைமை பண்டாரநாயக்க குடும்பத்திடம் இருந்திருக்கிறது. முதலில் எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்க, அதன் பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க, அதன் பின்னர் சந்திரிகா பண்டாரநாயக்க என சுதந்திர இலங்கையின் வாழ்நாளில் மூன்றிலொன்றைவிட அதிககாலம் நாட்டை ஆண்டவர்கள் இவர்கள்.

பொருளாதாரக் கொள்கை என்பதை தனித்து எடுத்துப் பார்த்துவிட முடியாது. ஒரு நாட்டின் பொருளாதாரம் என்பது சமூகக் காரணிகளில் பெரிதும் தங்கியதொன்று. இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்கி, இனப்பிரச்சினை வெடித்து, உள்நாட்டு யுத்தம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று, இந்தத் தீவில் இரத்த ஆறு ஓடுவதற்கு அடிப்படைக் காரணகர்த்தாக்கள் பண்டாரநாயக்க குடும்பத்தினரே!

தனிச்சிங்களச் சட்டம் என்பது கடைந்தெடுத்த இனவாதச் சட்டம். தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்க. சாதாரண சட்டமாக இருந்த தனிச்சிங்களச் சட்டத்தின் உள்ளடக்கத்திற்கு, அரசியலமைப்பு அந்தஸ்துக் கொடுத்து, சிங்கள மொழி மட்டுமே இலங்கையின் ஒரே உத்தியோகபூர்வ மொழி என்பதை அரசியலமைப்பு விதியாக மாற்றியவர் சிறிமாவோ பண்டாரநாயக்க.

இவர்கள் விதைத்த இனவாதத்தீ, பேரினவாதம் பேசாமல் இலங்கையின் ஆட்சிக்கட்டிலில் ஏற முடியாது என்ற நிலையைத் தோற்றுவித்தது. இலங்கையின் அரசியலை இந்தப் பாதையில் செல்ல வைத்தவர்கள் இவர்கள். இனவாதம் பேசிப்பேசியே வங்குரோத்தாகிப்போன நாடு இலங்கை. மொழியில் தொடங்கிய அடக்குமுறை, மற்ற எல்லா விடயங்களுக்கும் பரவியது. சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளாகியும், இன்னமும் இனப்பிரச்சினையின் ஆணிவேரான மொழிப்பிரச்சினைக்குக் கூட தீர்வு காண முடியாத நிலையில்தான் நாடு இருக்கிறது.

இதற்கான தீர்வு ஒன்றும் சிக்கலான விஞ்ஞானமல்ல. அது பலமுறை பலராலும் பேசப்பட்டிருக்கிறது. இலங்கையில் பரவலாக அனைத்து இடங்களிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் பயன்படுத்த வழிசமைக்கும் மும்மொழிக்கொள்கையை முழுமையாகவும், வினைத்திறனாகவும் அமல்படுத்துதல் இலங்கையின் மொழிப்பிரச்சினையை இலகுவாகத் தீர்த்துவிடும். இது ஒன்றும் மாயமந்திரம் தேவைப்படும் காரியமல்ல.

தேசிய ஒருமைப்பாட்டையும், அனைவரையும் அரவணைக்கும் தன்மையையும் மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு மும்மொழிக் கொள்கை அவசியமாகும். இலங்கை ஒரு பன்மைத் தேசிய நாடு. இங்கு சிங்களம், தமிழ் ஆகிய சுதேச மொழிகளும், ஆங்கிலமும் இலங்கை மக்களால் பரவலாகப் பேசவும், பயன்படுத்தவும் படுகிறது.

ஒவ்வொரு மொழிக்கும் அதன் சொந்த கலாசார முக்கியத்துவம் உள்ளது. மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாடு மொழியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் அதே வேளையில் நாட்டின் ஒற்றுமையையும் மேம்படுத்துகிறது. மேலும், மும்மொழி மொழிக் கொள்கையானது மொழி அடிப்படையிலான பாகுபாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவும் சமூக நீதியை மேம்படுத்தவும் வழிசமைக்கும்.

இலங்கையில், மொழியானது பாரபட்சம் மற்றும் ஓரங்கட்டப்படுவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது வெள்ளிடைமலை. மும்மொழி மொழிக் கொள்கையானது இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், சமத்துவம் மற்றும் நீதியான, நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் அவசியமானதாகும்.

இலங்கையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. பயிற்சி பெற்ற மொழி ஆசிரியர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் மொழி கற்றல், மற்றும் மொழி பெயர்ப்பிற்கான போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகும். மொழிக் கல்வியில் முதலீடு செய்வதன் மூலமும், மொழி கற்றலுக்கான ஆதாரங்களை வழங்குவதன் மூலமும் இதைத் தீர்க்க முடியும். பாடசாலைகளில் மும்மொழிக் கல்வி கட்டாயமானதாக்கப்பட வேண்டும். அனைத்து இலங்கையர்களுக்கு மும்மொழிக்கல்வி சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலில் மற்றொரு முக்கிய சவாலானது மக்கள்தொகையின் சில பிரிவுகளின் எதிர்ப்பாகும், அவர்கள் மும்மொழி மொழிக் கொள்கையை தங்கள் கலாசார மற்றும் மொழி அடையாளத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதலாம்.

மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில், இந்த சமூகங்களுடன் உரையாடலில் ஈடுபடுவதன் மூலமும் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதன் மூலமும் இதைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

இதற்கு அர்த்தம் இனவாதிகளில் இனவாதக் கோரிக்கைகளைத் திருப்தி அடையச்செய்ய வேண்டும் என்பதல்ல; மாறாக அவர்களை சரியான வழியில் கையாளவேண்டும். அவர்களின் தவறான, ஆபத்தான கொள்கைகளைப் பற்றிய வெளிப்படையான கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும். மும்மொழிக்கொள்கையின் நன்மைகளைப் பற்றி பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

> **நாட்டில் இனவாதம் தலைதூக்கி, இனப்பிரச்சினை வெடித்து, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தத் தீவில் இரத்த ஆறு ஓடுவதற்கு அடிப்படைக் காரணகர்த்தாக்கள் பண்டாரநாயக்க குடும்பத்தினரே!**

ஒரு நாடும், அரச இயந்திரமும் பலமொழிகளைக் கொண்டு இயங்க முடியுமா என்று கேட்பவர்களுக்குச் சரியான பதிலை வழங்க வேண்டும். பல மொழிகளை தங்கள் நாட்டின் அதிகாரப்பூர்வ மொழிகளாக வெற்றிகரமாக செயல்படுத்திய பல நாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, சுவிட்சர்லாந்தில் ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலியன் மற்றும் ரோமன்ஷ் ஆகிய நான்கு அதிகாரப்பூர்வ மொழிகள் உள்ளன. மேலும் மொழியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை மேம்படுத்தவும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் முடிந்தது. மொழிக் கல்வி முறை மற்றும் மொழி கற்றலுக்கான ஆதாரங்களை வழங்குவதன் மூலம் அந்த நாடு இதைச் சாதித்துள்ளது.

இதேபோல், கனடாவில் இரண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் உள்ளன. ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு; இதன் மூலம் கனடாவால் தேசிய ஒற்றுமையை ஊக்குவிக்கும் அதேவேளையில் மொழியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை மேம்படுத்த முடிந்தது. இப்படி இன்னும் நிறைய உதாரணங்களுண்டு.

ஆகவே மும்மொழிக் கொள்கை அமலாக்கம் என்பது சாத்தியப்படாத ஒன்று அல்ல. அதனைச் செய்வதற்கான அரசியல் விருப்பம் இருந்தால், அதனைச் சாதிக்கலாம்.

இலங்கையில் மும்மொழி மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு, அரசாங்கம் மொழிக் கல்வியில் முதலீடு செய்வதுடன், மொழி கற்றலுக்கும், மொழி பெயர்ப்பிற்குமான உரிய வளங்களையும் வழங்க வேண்டும். இதில் மொழி ஆசிரியர்களுக்கும், மொழி பெயர்ப்பாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது, மொழி கற்றல் பொருட்களை வழங்குவது மற்றும் மொழி கற்றல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவது ஆகியவை அடங்கும்.

மிக முக்கியமாக அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக, உறுதியாக வகையில், மும்மொழிக் கொள்கை கட்டாயமானதாக்கப்பட வேண்டும். இலங்கையின் எந்தவொரு குடிமகனுக்கும், மும்மொழிகளில், தான் விரும்பும் மொழியொன்றில் அரசின் சகல சேவைகளையும் அணுகக் கூடிய உரிமை வழங்கப்பட வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு மும்மொழி அறிவு கட்டாயமானதாக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆட்சேர்ப்பின் போது, மும்மொழி ஆற்றல் அடிப்படைத் தகுதியாக மாற்றப்பட வேண்டும். மேலும், மும்மொழிக் கொள்கையை எதிர்க்கக்கூடிய சமூகங்களுடனும் அரசாங்கம் உரையாடலில் ஈடுபட வேண்டும்.

மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

'தனிச்சிங்களம்' என்பது ஒரு வரலாற்றுத் தவறு. அதனால் இனரீதியாக தமிழர்கள் பாதிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால், இலங்கையின் பொருளாதாரத்திற்கும் அது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சேவை மைய பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கைக்கு ஆங்கில அறிவின் பற்றாக்குறை என்பது பெரும் பின்னடைவாகவே இருக்கிறது. உல்லாசப் பிரயாணத்துறையாக இருக்கட்டும், அல்லது தொழில்நுட்ப சேவைத்துறையாக இருக்கட்டும், உலகத்திற்கு எமது சேவைகளை விற்பதற்கு ஆங்கில அறிவு இன்றியமையாத தேவை.

தனிச்சிங்களச் சட்டம் இல்லாதொழித்த முக்கியமான விடயங்களில் ஒன்று இலங்கையர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்த தரமான ஆங்கிலக் கல்வி. அந்தத் தரமான ஆங்கிலக் கல்வியுடன், சிங்களம், தமிழ் என்பவை புகட்டப்பட்டிருந்தால், இலங்கையின் நிலை மேம்பட்டதா இருந்திருக்கும். ஆனால் அதனைச் செய்யாது தனிச்சிங்களம் என்ற இனவாத வெறிக்குள் ஊறியதன் பிரதிபலனைத்தான் இலங்கை இன்றும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது என்ற கருத்தில் உண்மையில்லாமல் இல்லை. இன்று இதனை மாற்ற, மும்மொழிக் கொள்கையின் முழுமையான அமலாக்கம்தான் சாலச்சிறந்த வழி.

கடிதங்கள்

கந்தளாயில் காட்டு யானைகள் அட்டகாசம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னிரெண்டாம் கட்டை பகுதியில் காட்டு யானைகள், ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை கிராமத்திற்குள் புகுந்து வீடுகளை சேதப்படுத்தி நெல் மூடைகளை உடைத்தும் சேதப்படுத்தியும் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பன்னிரண்டாம் கட்டைப் பகுதியில் நாளாந்தம் யானைகளினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் காட்டு யானைகள் நெல் மூடைகளை இழுத்துச் சென்று சாப்பிடுவதாகவும், இரவு வேளைகளில் நடமாட முடியாத நிலையில் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

மேலும் அப்பகுதியில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதனை உடைத்தெறிந்து உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானையினால் தமது வீடு சேதமடைந்துள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி புனரமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்

டெல்லி

விடைபெற்றார் ராகுல் காந்தி

முன்னாள் காங்கிரஸ் தலைவரான ராகுல் காந்தி கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது, "மோடி என்ற பெயர் கொண்டவர்கள் திருடர்கள் எனக் கூறியதாகவும், அவர் பிரதமர் மோடியை மறைமுகமாக தாக்கியதாகவும் " பாரதிய ஜனதா கட்சி சார்பில் சூரத் நீதிமன்றத்தில் வழக்குத் தொரடப்பட்டது.

இவ்வழக்கில் ராகுல்காந்தி குற்றவாளி எனத் தீர்ப்பளித்த சூரத் நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததோடு, ராகுல் காந்தி மேல்முறையீடு செய்வதற்காக 30 நாட்கள் இந்த தண்டனையை நிறுத்தியும் வைத்து உத்தரவிட்டது.

இதையடுத்து வயநாடு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராகுல் காந்தியை, எம்.பி பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்து மக்களவைச் செயலகம் அறிவித்தது.

அத்துடன் டெல்லி துக்ளக் லேனில் அவர் வசித்து வந்த அரச மாளிகையையும் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சுமார் 19 ஆண்டுகளாக வசித்து வந்த குறித்த மாளிகையில் இருந்து நேற்று முன்தினம் ராகுல் காந்தி விடைபெற்றார்.

இதன்போது " கடந்த 19 ஆண்டுகளாக இந்த வீட்டை தனக்குக் கொடுத்த மக்களுக்கு நன்றி சொல்ல விரும்புவதாகவும், உண்மையைப் பேசுவதற்கான விலை இதுதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெங்களூர்

டிக்டொக் வைத்திருந்ததால் காதலி எரிப்பு



டிக்டொக் செயலியால் நபர் ஒருவர் தனது காதலியைக் கொலை செய்த சம்பவம் பெங்களூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர் யாதகிரி பகுதியைச் சேர்ந்தவர் மாருதி. இவர் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் குறித்த பெண் தனது பெரும்பாலான நேரத்தை டிக்டொக்செயலியில் செலவிட்டு வந்துள்ளார் எனவும், மேலும் டிக்டொக்கில் ஆண் நண்பர்கள் பலருடன் சேர்ந்து வீடியோ வெளியிட்டு வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இது குறித்து மாருதிக்குத் தெரிய வரவே அவர் காதலியை கண்டித்து வந்துள்ளார்.

எனினும் அவர் அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்து டிக் டொக்கில் வீடியோ வெளியிட்டு வந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மாருதி, வீட்டில் யாரும் இல்லாத நேரம் காதலியைக் கொலைசெய்துவிட்டு அவரின் உடலை பெற்றோல் ஊற்றி எரித்துவிட்டு தனது உயிரையும் மாய்க்க முயன்றுள்ளார்.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தியாவுக்கு பைடன் விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வரும் செப்டெம்பர் மாதம் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உயரதிகாரி டொனால்ட் லூ கருத்துத் தெரிவிக்கையில் "இவ்வாண்டு அமெரிக்க மற்றும் இந்தியாவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக இருக்கும். அத்துடன் செம்டெம்பரில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வதை ஜனாதிபதி பைடன் எதிர் நோக்கியுள்ளார். அத்துடன் ஜி உச்சி மாநாட்டிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

அதுமட்டுமல்லாது நடப்பாண்டில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களுக்கு அமெரிக்கா விசா வழங்கவுள்ளதாகவும் இதில் மாணவர்கள் மற்றும் கணினி சார் துறையினருக்கு முன்னுரிமை அளிக்கப்படவு ள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்

பெண்களுக்கு ரமழான் தடை

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளைத் தலிபான் அரசு விதித்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பூங்காவுக்குச் செல்வதற்கும், உயர் கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில் தற்போது இஸ்லாமியர்களின் முக்கிய பண்டியையான ரமழானையும் பெண்கள் கொண்டாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படடுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் ஹிஜாப் அணிய மறுப்பதாலும், ஆண் பெண் பேதமின்றி நடந்துகொள்வதாலுமே இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்அறிவிப்பானது உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கனடா

பிங்க் ஹீலுடன் எம்.பிக்கள்

கனடா பாராளுமன்றத்தில் ஆண் எம்.பிக்கள் சிலர் இளம் சிவப்பு நிறத்தில் ஹீல்ஸ் அணிந்து வந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் பெண்கள் தங்குமிடத்திற்கு நிதியை திரட்டுவது மற்றும் பாலின வன்முறை குறித்து ஆண்களும் சிறுவர்களும் அறிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டு கடந்த 4 ஆண்டுகளாக 'ஹோப் இன் ஹை ஹீஹீல்ஸ்' என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக ஆண் எம்.பிக்கள் இவ்வாறு இளம் சிவப்பு நிறத்தில் ஹீல்ஸ் அணிந்து பிரச்சாரத்தினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று ஆரம்பிக்கின்றது இரண்டாவது டெஸ்ட்:

இலங்கைக்கு சவாலளிக்குமா அயர்லாந்து?

இலங்கை, அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது காலியில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இனிங்ஸால் இலங்கை வென்ற நிலையில், இலங்கையணிக்கு சவாலளிப்பதற்கே அயர்லாந்து பலத்தளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக ஹரி டெக்டர், கேட்டிஸ் கம்பர், ஜோர்ஜ் டொக்ரல், லொர்கன் டக்கர் தவிர்ந்த ஏனையோர் நிலைத்து நின்று ஆட வேண்டியுள்ளது. இதேவேளை, மரே கொமின்ஸுக்குப் பதிலாக இப்போட்டியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படும் போல் ஸ்டேர்லிங்கும், அணித்தலைவர் அன்டி போல்பிரயனும் நீண்ட இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது.

மறுப்பக்கமாக இலங்கையணியில் மாற்றமெதுவும் இருக்காது என நம்பப்படுகின்றபோது, ஆரம்பத் துடுப்பாட்டவீரர் இடத்தை நீண்ட காலத்துக்கு தனதாக்கிக் கொள்வதற்கு நிஷான் மதுஷ்க ஓட்டங்களைப் பெறுவது அவசியமாகிறது.

ஐ.பி.எல்: மும்பையை வென்ற பஞ்சாப்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), வான்கடேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

பஞ்சாப்: 214/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சாம் கர்ரன் 55 (29), ஹர்பிறீட் சிங்க் 41 (28), அதர்வா டைட்டே 29 (17), பிரபஹ்சிம்ரன் சிங்க் 26 (17), ஜிதேஷ் ஷர்மா 25 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: பியூஷ் சாவ்லா 2/15 [3])

மும்பை: 201/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: கமரொன் கிறீன் 67 (43), சூரியகுமார் யாதவ் 57 (26), றோஹித் ஷர்மா 44 (27), டிம் டேவிட் ஆ.இ 25 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங்க் 4/29 [4])

போட்டியின் நாயகன்: சாம் கர்ரன்

முன்னதாக லக்னோவில் நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்கிறது.

ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

தோற்ற நடப்புச் சம்பியன்கள் பயேர்ண் மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், மைன்ஸ் 05 அணியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் தோற்றது.

அந்தவகையில் புண்டெஸ்லிகா புள்ளிகள் பட்டியலில் 60 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பொரூசியா டொட்டமுண்ட் உள்ளது. 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மியூனிச்சும், 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் யூனியன் பேர்லினும், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஆர்.பி லெய்ப்ஸிக்கும் காணப்படுகின்றன. இதில் பேர்லினும், லெய்ப்ஸிக்கும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட் கிழமை 24 ஏப்ரல் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.